Doi: 10.60072/book.icoge2026.107

# செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் வகுப்பறைக் கல்வி சார் மதிப்புகள்

**இரா. ஏஞ்சல்**

**Fatima College (Autonomous), India**

***Corresponding author:*** *drrangelthomas2003@gmail.com*

**Abstract**

மனிதனைச் சமூகத்தில் மதிப்பு மிக்கவனாக அடையாளப்படுத்துவது கல்வியே! குருகுலக் கல்வி தொடங்கி கூகுள் கல்வி வரையிலான வளர்ச்சியானது மனித அறிவு வளர்ச்சிக்கும் அறிவியல் புரட்சிக்குமான வளர்நிலையாகும். தலைமுறை தலையெழுத்தையே மாற்றும் சக்தி கல்விக்கு உண்டு. பன்னோக்கு நிலையிலும் நுண்ணோக்கு நிலையிலும் கல்வி கற்றல் நிலையில் புரட்சி மாற்றங்கள் வந்தாலும் அறிவியலும் தகவல் தொழில்நுட்பமும் பலுகிப் பெருகினாலும் வகுப்பறைகளே கல்விக்கான மதிப்பு நிலைகளைக் கற்றுக் கொடுக்கின்றன. ஆசிரியர் – மாணாக்கர் உறவுநிலையில் ஆசிரியரானவர் மாணக்கருக்குக் கல்வி, ஒழுக்கம், சமூக மதிப்புகள், மனித மதிப்புகள் எனப் பல செய்திகளை எடுத்துரைக்கும் கருவியாக விளங்குகின்றார். செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் மாணாக்கருக்குக் காலத்திற்கேற்ற நுண்திறனை வளர்க்கின்றன. செயற்கை நுண்ணறிவு ஊடகம் மற்றும் தொழில்நுட்பம், மருத்துவம், உடல்நலம், ஆன்மிகம் எனப் பல்வேறு மதிப்பு அடிப்படையிலான கல்விநிலை வளர்ச்சி மனிதனை அறிவுசார் நிலையில் வளர்த்தெடுப்பினும் மாணாக்கர் உளவியல் சார் நிலையிலும் பன்நோக்கு நிலையிலும் பக்குவம் பெற வகுப்பறைகளே வித்தாக அமைகின்றன. செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் வாழும் இக்காலக் கட்டத்தில் வகுப்பறைக் கல்வியே, கல்வியினால் கிட்டும் விலைமதிப்பில்லா மதிப்புகளை விளக்குகின்றது என்பது ஆய்வுக் கட்டுரையின் கருதுகோளாகவும் மையமாகவும் அமைகின்றது. இதற்காக மாணாக்கரிடமிருந்து கூகுள் கருத்துப்படிவம் அனுப்பி, தகவல் பெறப்பட்ட நிலையிலும் வகுப்பறைக் கல்வியே மாணாக்கரிடமிருந்து வரவேற்கத்தக்கதாய் அமைந்ததன் வழி, செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் வகுப்பறைக் கல்வி சார் மதிப்புகளே மாணவ சமுதாயம் விரும்பும் கல்விமுறை என்னும் முடிபு பெறப்படுகின்றது.

***திறவுச் சொற்கள்: கல்வி, வகுப்பறை, ஆசிரியர், மாணாக்கர், செயற்கை நுண்ணறிவு, இயங்கலை வகுப்பு***

## முன்னுரை

மனிதனுக்கான உணர்வு, உணர்ச்சி இரண்டும் உடலோடும் உள்ளத்தோடும் தொடர்புடையவை. அழுகை என்னும் உணர்ச்சி வழி, தாயின் கருவறையிலிருந்து வெளிவரும் மனிதன், அறிவு நிலையில் உணர்வுப் பூர்வமாகச் சிந்திக்கத் தொடங்குகின்றான். அறிவு சார் சிந்தனைக்கு அடித்தளம் இடுகின்றது கல்வி. ஒவ்வொரு மனிதனுக்குமான முதல் வகுப்பறை தாயின் கருவறையே! முதல் ஆசிரியர் தாயே! தாயானவள் கருவில் தன் குழந்தை இருக்கும் போதே தன்னுடைய குழந்தைக்குக் கற்றுத் தர ஆரம்பித்து விடுகின்றாள். தாயின் கருவிலேயே நுண்ணோக்கு நிலையிலான பன்னோக்குப் பார்வை சார் அனுபவக் கல்வி அரங்கேற்றம் பெறுகின்றது. தாயின் கருவறையிலேயே குழந்தைக்குத் தாய் சந்திக்கும் சூழல்கள், சிசு வளர் நிலையில் கேட்டல் திறன், உள்வாங்கும் உரைகள், உற்றுநோக்கலுக்கான அசைவுகள் எனக் கற்றல் நிலை தொடங்க ஆரம்பித்து விடுகின்றது. இது வாழ்க்கை அனுபவக் கல்விக்கான அடித்தளமாய் அமைந்து விடுகின்றது. முறையான ஏட்டுக் கல்வியறிவுக்கான பள்ளிக் கல்வியானது, அறிவு சார் முதிர்ச்சி என்னும் நிலையில் வாழ்விற்கான பயிற்சிகள் ஆக மாறுகின்றன. தொடக்க நிலையிலான குரு குலக் கல்வி முறை தொடங்கி, இன்றைய கூகுள் கல்வி வரையிலான வளர்ச்சி கட்டாயமாக மனிதனின் அறிவு வளர்ச்சிக்கும் அறிவியல் புரட்சிக்குமான வளர்நிலை என்பதில் கடுகளவும் ஐயமில்லை.

ஆயினும் வகுப்பறைக் கல்வி மட்டுமே தனிமனித ஆளுமை வளர்ச்சி, மனுக்குல மாட்சி, மனிதநேய மீட்சி மற்றும் வளர்ச்சிக்கு வித்திடுகின்றது என்பதே ஆய்வுக் கட்டுரையின் கருதுகோளாகவும் கருப்பொருளாகவும் அமைகின்றது.

## கல்வியின் அவசியம்

‘நம்பிக்கை’ என்னும் சொல்லைப் பிரித்துப் பொருள் பார்த்தால், ‘நம்பி கை வை’ எனக் கொள்ளலாம். எதை நம்பி, யாரை நம்பி என்ற வினாக்களுக்கான விடையாக, தன்னை மட்டுமே நம்பி என்று பொருள் கொள்ள வைக்கும் விடையாக ஆயுதமாகக் கல்வி அமைகின்றது.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் அவசியம் குறித்து வலியுறுத்துகின்றார்.

**“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே”**

(புறநானூறு பா.எண் - 183)

என்கின்றார். இதே பாடலில் இன்னொரு கருத்தையும் பதிவிடுகின்றார். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தான் கண்ணால்

காணும் தெய்வம் தன் தாய் தான் என்ற நம்பிக்கை உண்டு. தாய் எத்தனைப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தாலும் தன் எல்லாக் குழந்தைகளிடம் மாறா அன்புடையவளாகவே இருப்பாள். அப்படிப்பட்டத் தாயின் மனம் கூடத் திரியுமாம் எப்போது என்றால்,

**“பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்**
**சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்**
**ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும்**
**‘மூத்தோன் வருக’ என்னாது அவருள்**
**அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்**
**வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே”**

(புறநானூறு பா.எண் - 183)

என்கின்றது பாடல். பாடல் கூறும் பொருள் யாதெனின், தனக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியருக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்தும் உதவிகள் செய்தும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஒரு தாய் வயிற்றில் பிறந்த பல பிள்ளைகளுள் நன்கு அறிவு படைத்தவனிடமே தாய் கூடுதலாகக் கரிசனை காட்டுவாள். பொதுவாக முதலாவதாகப் பிறந்த குழந்தை, “மூத்தபிள்ளை” **“தலைச்சன் பிள்ளை”** என்று உயரிய இடத்தில் வைத்து எண்ணப்படும். எல்லாத் தாய்மார்களும் தனக்குப் பிறந்த தலைச்சன் குழந்தை மீது அதீத அன்பு வைத்திருப்பர். இது உலக இயல்பு. ஆனால் ஒருவேளை மூத்த பிள்ளையைக் காட்டிலும் அவருக்குப் பின் பிறந்த குழந்தை அறிவுடையவராய், கல்வியறிவு பெற்றவராய்த் திகழ்ந்திடின் தாயின் அன்பு கூடத் திரியும் என்று பாடல் கருத்து விளக்குகின்றது. நாடாளும் அரசனும் அறிவுடையவரையே விரும்புவான் எனக் குறிப்பிடுகின்றது.

உலகப் பொதுமறையாம் திருக்குறளில் கல்வியின் மேன்மை, கல்வி கற்றாரின் உயர்மை, குறித்த செய்திகள் இடம் பெறுகின்றன. கல்வி என்னும் அதிகாரத்தின் கீழ் அமையும் குறட்பாக்கள் கல்வியின் மேன்மையை, கற்றாரின் சிறப்பைப் பறைசாற்றுகின்றன.

**“கண்ணுடைய ரென்பர் கற்றோர்”** (திருக்குறள் எண் 393) என்றும்
**“ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து”** (திருக்குறள் எண் 398) என்றும்
**“கேடில் விழுச்செல்வம் கல்வி”** (திருக்குறள் எண் 400) என்றும் எடுத்துரைக்கின்றன.

கல்வி என்பது தலைமுறையின் தலையெழுத்தையே மாற்றக் கூடிய கூரிய ஆயுதம் ஆகும். எனவே கல்வி கற்றலில் நோக்கம்/குறிக்கோள் என்பது அவசியமாகின்றது. இலக்கு நோக்கிய கல்வி, இமயத்தின் உச்சியைக் கூடத் தொட வைக்கும். எனவே தான் வெற்றி வேற்கை,

**“கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை**

**புகினும் கற்கை நன்றே" (பாடல் எண் 35)**

என்கின்றது. தலைமுறை தலைமுறையாக வறுமையில் வாடும் குடும்பம், முதல் தலைமுறைக் கல்வி என்னும் நோக்கில் வளர்ச்சி பெறுமாயின், அவர் தம் தலைமுறையானது அடுத்தடுத்த தலைமுறைக்குத் "திருப்புமுனைத்" தலைமுறை மாற்றமாய் அமையும். ஒருவர் எவ்வளவு தான் பெயரும் புகழும் மிக்கவராக இருந்தாலும் அவருக்கான அடையாளத்தை, அவர் கற்ற கல்வியால் பெற்ற பட்டப்படிப்பிற்கான அடையாளமே காட்டும். பெயருக்கு முன்னால் தந்தை அல்லது தாயின் பெயர் முன்னெழுத்தாய் அமைதல் போல் பெயருக்கு மேலும் அழகு சேர்ப்பதாய் பட்டப்படிப்பின் முன்னெழுத்தும் நெற்றிப்பொட்டு போல் அழகு சேர்க்கும். கல்வியால் பெற்ற பட்டத்திற்கான அடையாளம் சிலருக்குப் பின்னொட்டாய் அமையும். ஒருவர் மரணம் அடைந்த பின்னும் கூட, அவர் பெற்ற கல்வி அடையாளம் அவர் தம் நினைவிடக் கற்பெயரில் பொறிக்கப்படும். எனவே பன்நோக்கு மற்றும் நுண்ணோக்கு நிலையிலும் எந்நோக்கு நிலையிலும் கல்வி மனிதனுக்கு அவசியம் ஆகும்.

முன் (முதல்) நோக்கு

**"எண்ணிய முடிதல் வேண்டும்**
**நல்லவே எண்ணல் வேண்டும்"**

(பாரதியார் கவிதைகள், ப.எண்114)

என்னும் பாரதியின் பாடல் வரிகள் நல்ல எண்ணங்கள் குறித்த சிந்தனையைச் சிந்தைக்குள் இருத்தக் கற்றுக் கொடுக்கின்றன. ஒரு மனிதனிடம் ஆளுமைத் திறன் இருப்பினும் அவனைப் பேராளுமை படைத்தவனாக உருவாக்குவது அவனுடைய செயல் வெளிப்பாடுகளே! இயல்பாக மனிதன் நற்சிந்தனை படைத்தவனாக இருப்பினும், கல்வி என்னும் கருவி அவனுக்குள் இருக்கும் சிந்தனையைச் செயலூக்கியாகச் செயல்பட வைத்துச் செயல் ஆக்கம் பெறுகின்ற மனிதனாக மாற்றுகின்றது.

சிந்தனைக் களமாக வகுப்பறையும் சிந்திக்க வைக்கும் 'கோ'வாக ஆசிரியரும் அமைகின்றனர். தன்னோடு ஒத்திசைவு இல்லாத அல்லது தன் கருத்துக்கு முரண்படுகின்ற மாற்றான்களாக தன்னுடன் பயிலும் சக மாணவரோ, மாணவர் குழாமோ அமையும் நிலையில் மாணாக்கருக்கு வகுப்பறையானது மாற்று உருவாக்கச் சிந்தனைக் களமாக மாறி விடுகின்றது.

விளை நிலத்தில் மண் உரம் பெறும் பொருட்டாய் மாற்றுப் பயிர்கள் பயிரிடுதல் போல மாணாக்கர் தம் அறிவு சார் சிந்தனை வளர்ச்சிக்கு வகுப்பறை அனுபவங்கள் விதைகளாக அமைகின்றன.

'கண்' - நோக்கு

**"கண்ணோடு கண்ணினை நோக்கொக்கின்**
**வாய்ச்சொற்கள்**

**என்ன பயனும் இல"** (திருக்குறள் எண் 1100)
என்பது செந்நாப்போதாரின் கருத்து. இத்திருக்குறளானது திருக்குறளில் காமத்துப்பாலில் தலைவன் தலைவிக்கு இடையே உள்ள உறவுநிலைக்கான குறள். ஆனால் உளவியல் நோக்கில் உற்றுநோக்கிடின் அனைத்து உறவுகளுக்குமான பாலமாய்க் கண் அமைவதைக் காணலாம். வகுப்பறையில் ஆசிரியர் கற்பித்தல் நிலையைத் தாண்டி, மாணாக்கரை, அவர் தம் பாடம் கேட்கும் அறிதிறன் நிலையைக் கண்காணிக்கின்றார். அப்போது அங்கு ஆசிரியரின் கண்கள் மாணாக்கரை அவர் தம் செயல்பாடுகளை உற்றுநோக்குகின்றன. இந்த நோக்கு மாணவரின் மனஉணர்வு வெளிப்பாட்டைக் கண்டுணர உதவுகின்றது.
வெவ்வேறு குடும்பச் சூழலில் இருந்து ஒன்று கூடும் வகுப்பறையில் மாணாக்கரது சிக்கலை, உணர்வை அறியும் தாயாக, தந்தையாக ஆசிரியர் மாறி விடுகின்றார். கருத்தரங்கப் பொருண்மை சார் நிலையில் இன்றைய மாணாக்கர் மனநிலையை ஆய்விற்கு உட்படுத்திடின் பன்நோக்கு அறிவு நிலையிலும் நுண்ணோக்கு வளர் நிலையிலும் மாணாக்கரின் வளர்ச்சி உயர்ச்சியாய்த் தான் இருக்கின்றது. ஆனால் உள நிலையிலும் உணர்வு நிலையிலும் வளர்ந்திருக்க வாய்ப்பு இல்லை என்பதே உண்மை.

ஆசிரியருக்கும் மாணாக்கருக்கும் இடையிலான அளவளாவலுக்கு வகுப்பறையே வித்திடுகின்றது. இன்றைய அறிவியல் தொழில் நுட்பத் தகவல் வளர்ச்சிப் பெருக்கு, கல்வி தாண்டிய நிலையில் மாணாக்கரைத் தன் வயப்படுத்தி விடுகின்றது. கல்வித் தேடலுக்கு உதவியாய் இருக்கும் கை பேசியோ மடிக்கணிணியோ மாணவரின் வளர்ச்சியைச் சிதைக்கும் காரணியாகி விடுகின்றது. குடி மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களைக் கூட நன்னிலைக்குக் கொண்டு வரல் எளிது; ஆனால் அலைபேசிக்கு அடிமையானவர்களை மீட்டெடுத்தல் கடினம் எனும் நிலையிலேயே குடும்ப அமைப்பும் ஆகிவிட்டது. தாயும் தந்தையும் வேலைக்குச் செல்லும் சூழலில் தன் ஓய்வுக்காகவோ அல்லது தன் மன இறுக்கச் சூழலில் இருந்து விடுபடவோ அவர்களின் பொழுதுபோக்காகவும் கைபேசி அமைந்து விடுகின்றது. தம் பிள்ளைகளிடம் மனம் விட்டுப் பேசவோ குடும்ப அன்புறவைக் கட்டி எழுப்பவோ நேரமில்லாது போய் விடுகின்றது. விளைவு பள்ளியில் பயிலும் பருவத்தினராயினும் வளரிளம் பருவத்தினராயினும் போதுமான அன்பு, அரவணைப்பு, தன் உள உணர்வுப் பகிர்தல், தன் அளவளாவுதல் என இவற்றுக்கான வாய்ப்புக் கிட்டாச் சூழலில் பாதிப்பிற்குள்ளாகின்றனர். ஈண்டு ஆசிரியரின் ‘கண்’ நோக்கு மாணவனுக்கான கரிசனையாக மாறி விடுகின்றது. இந்த வாய்ப்பினை இயங்கலை வகுப்புத் தராது.
மனித மனக் கட்டமைப்பு, உணர்வு நிலைக் கட்டுக்கோப்பு, நெறி சார் எண்ண வளர்ப்பு, புரிதலுடனான மனமுதிர்ச்சி, உறவுநிலை

பேணுதல், சமூக உற்று நோக்கு, தன்நிலை மேம்பாடு எனப் பன்நோக்கு வளர்ச்சி நிலைக்கு வகுப்பறைக் கல்வியே வித்திடுகின்றது.

வளர்நிலை நுண்நோக்கு

வகுப்பறை என்பது பள்ளி மற்றும் கல்லூரி எனும் இருநிலைக்கும் பொதுவாகும். தொலைதூரக் கல்வியோ, அஞ்சல்வழிக் கல்வியோ இயங்கலை நிலையிலான கல்வியோ பன்னோக்கையும் நுண்ணோக்கையும் தரலாம். அது அறிவு சார் நிலைக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் மட்டும் உதவும். ஆனால் வாழ்வின் வாழ்விற்கு மகிழ்ச்சி தராது. குறுகிய வட்டத்திற்குள்ளேயே அவர் தம் வாழ்வு அமையும். அப்படியான வாழ்க்கை என்பது பயனற்றது என்பதைப் பாவேந்தர் பாரதிதாசன்,

**“தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு**
**சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்**
**சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்**
**தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!**”(பாரதிதாசன் கவிதைகள், ப.101)

என்று குறிப்பிடுகின்றார்.

நுண்ணோக்கு நிலையில் கல்வி மாற்றம் தகவல் தொழில் நுட்ப நுண்ணறிவுத் திறனை வளர்த்தெடுத்தலில் பெரும் பங்காற்றியுள்ளது. ஆயினும் ஒரு மனிதன் தான் இன்னொருவர் மீது கொள்ளும் அதீத அன்பால், தான் மனச்சிக்கலுக்கு ஆளாவதுடன் தான் நேசிக்கும் மனிதருக்கும் துன்பத்தைக் கொடுக்கின்றாரோ அதே போல் தான் நுண்ணோக்குத் திறனுமாம். எவ்வாறெனின் நுண்ணோக்கு நிலையில் கல்வி மாற்றம் தகவல் தொழில் நுட்ப நுண்ணறிவுத் திறனை வளர்த்தெடுத்தலில் பெரும் பங்காற்றி வருகின்றது. உலகளாவிய நிலையில் கொரோனா பெருந்தொற்றுக் காலக் கட்டம் டிஜிட்டல் கல்வி நிலையில் பரிணாம உச்சத்தை வளர்த்தெடுக்க உதவியது.

அச்சூழலில் தொடங்கப்பட்ட இயங்கலை வகுப்புகள் நுண்ணறிவு நிலையில் மாணாக்கரை வார்த்துள்ளது. ஆனால் அறிவு சார் தேடல் நிலையிலோ மனிதநேய மதிப்பீட்டு நிலையிலோ பண்பாட்டு மரபு சார் ஒழுக்க வளர் நிலையிலோ ஒரு விதமான எதிர்மறை விளைவை ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மை.

இயங்கலை வகுப்புக் கால கட்டங்களில் மாணாக்கர் பாடத்தைப் படிக்காமல் தேர்வு எழுதி புத்தகத்தில் உள்ள கருத்தை அப்படியே கோப்பு வடிவில் தேர்வுத்தாளைப் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டில் தங்களின் கைவினைத்திறன் சார் வெளிப்பாடுகளையோ தனக்கான படைப்பு வெளிப்பாட்டு நுணுக்கங்களையோ வெளிக் கொணர வாய்ப்புக் கிட்டுவதில்லை.

நூலகப் பயன்பாட்டில் தான் தேடும் செய்தி தொடர்பாக உள்ள நூல்களுடன் பிற நூல்கள் கண்ணில் படும் போது வாசிப்பிற்கு வழி வகுக்கும். ஆனால் செயற்கை நுண்ணறிவுத் திறன் சார் வடிவமைப்பில் ஏற்கனவே உள்ள தரவுகளுக்குப் புற அழகு மெருகூட்டலுக்கும் கண்கவர் கவன ஈர்ப்புக்கு மட்டுமே அதிகம் வாய்ப்புள்ளது.

செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் மாணாக்கர் தேடும் செய்தியை மிக எளிமையாகத் தொழில் நுட்பக் கட்டமைப்பில் டிஜிட்டல் உதவியாளராகப் பன்நோக்கு நிலையில் பயன்பெறும் வகையில் தேடும் தரவுகளைத் தருகின்றன. இக் கருத்தை உறுதிப்படுத்தும் விதமாக மாணாக்கரிடமிருந்து கூகுள் கருத்துப்படிவம் அனுப்பி, தகவல் பெறப்பட்ட நிலையில்,“அறிவுப் பெருக்கத்திற்கு செயற்கை நுண்ணறிவு வழி வகுக்கின்றது” என 90.1 மாணாக்கர் பதில் பதிவிட்டுள்ளனர். ஆனால் மனித உறவு - இயந்திர நிலை என்னும் நிலையில் மதிப்பீட்டுக் கல்வி சார் ஒழுக்கங்களுக்குத் தடைசார் கருவியாகவே உள்ளன. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி நிலையிலான இயங்கலை வகுப்புகள் மாணாக்கருக்கு மதிப்பீட்டுக் கல்வியைக் கற்றுத் தருவதில்லை. இக் கருத்தை ஒட்டி கேட்கப்பட்ட கூகுள் வினாத் தரவு சேகரிப்பிலும், “இயங்கலை வகுப்புகள் மதிப்பீட்டுக் கல்விக்குத் துணைபுரிவதில்லை என்று 84.5 பதில் பெறப்பட்டது.

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியின் உயர்ந்த நிலையிலான இன்றைய நோக்கில் ஐயங்களுக்கான விடைகளைத் தேடி அவற்றுக்கான பதில்களை செயற்கை நுண்ணறிவு தருகின்றது. ஆனால் பெற்றுக் கொண்ட தரவுகளின் இறுதியில் அது வைக்கும் கருத்து “AI பதில்களில் தவறுகள் இருக்கலாம்” என்பது தான். எனவே, “மெய்ப்பொருள் காண்பது அறிவு” என்பதை மனதில் கொண்டு சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்,

## முதிர்நோக்கு

கல்வி மனிதனுக்கு நம்பிக்கையைக் கொடுக்கின்றது. தான் பெற்ற கல்வி வழியாகப் பொருட்செல்வத்தால் தன் நிலை உயரும் நிலையில், பிறருடன் பொருட்செல்வத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள, கல்வியறிவு துணையாய் அமைதல் வேண்டும்.

தன்னை நம்பி உதவி நாடி வருவோர்க்கும் பிறர் குறிப்பறிந்து உதவுவதற்கும் தான் பெற்ற பெருவளமான அருட்செல்வம், பொருட்செல்வம் எனும் இவற்றைப் பெறாரும் பெறும் பொருட்டு உதவும் மனப்பான்மையை வளர்க்க, கல்வியறிவு உதவிடல் வேண்டும்.

நல்லெண்ணங்களையும் பரந்த மனப்பான்மையையும் சமூக அக்கறையையும் பேணுதலில் அக்கறை செலுத்துவதற்குக் கல்வியறிவு கற்றுத்தரல் வேண்டும். பாலுடன் நீர் கலந்திடினும் தன்

நிறம் மாறாப் பால் போல் கல்வி மனிதனையும் மனதையும் பக்குவப்படுத்திட வேண்டும்.

முடிவுரை

இது காறும் கல்வியை மையப்படுத்தி ஆய்வு மேற்கொண்ட நிலையில்,

 தலைமுறைத் தடைகளையும் தலையெழுத்தையும் மாற்றும் ஆயுதம் கல்வி

 கல்வி ஆளுமைக்கு அடித்தளம் இடுகின்றது.

 மனித அறிவு வளர் நிலையில் நுண்ணோக்கு நிலை வளர்ச்சிக்கு செயற்கை நுண்ணறிவு வழி வகுக்கின்றது.

 பன்னோக்கு நிலை அறிவு வளர்ச்சிக்கு வகுப்பறைக் கல்வியே வழி வகுக்கின்றது.

 பன்னோக்கு நிலையிலும் நுண்ணோக்கு நிலையில் நோக்கினாலும் வகுப்பறையே சமூகக் கட்டமைப்பைக் கட்டி எழுப்புகின்றது.

என்னும் கருத்துக்கள் பெறப்படலாகின்றன.

**துணைநின்ற நூல்கள்**

**விகரு.இராமநாதன்(ப.ஆ), பாரதியார் கவிதைகள்,ஸ்ரீ இந்து பப்ளிக்கேஷன்ஸ், தெற்கு உஸ்மான் ரோடு, சென்னை – 35.**

**கோமுகி சுப்ரமணியன் (தொ.ஆ),பாரதிதாசன் தேன்தமிழ்க் கவிதைகள், நர்மதா பதிப்பகம், சென்னை – 17.**

**ஞா. மாணிக்கவாசகன்(உ.ஆ), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், பவளக்காரத்தெரு, சென்னை – 01.**

**துரை – தண்டபாணி (உ.ஆ), நீதி நூல்கள், உமா பதிப்பகம், பவளக்காரத்தெரு, சென்னை – 01.**

**பரிமேலழகர் (உ.ஆ), திருக்குறள், பூம்புகார் பதிப்பகம், பிராட்வே, சென்னை08**